## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 64/2021

2025 –ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.3 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 19.08.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அசோக்குமாமர் (PW) | வயது | : | 29/2025 |
| த/க பெயர் | : | திரு.மதிபாலன் | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |
| முகவரி | | திருக்களார் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க திருக்களார் கிராம சர்வே எண்.185/4 கிராம கணக்குகளுடன் ஆஜராகி சாட்சியம் அளிக்க குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருக்களார் கிராம சர்வே எண்.185/4 க்கான சிட்டா , அடங்கல், புல வரைபடம் ஆகியவை கைவசம் கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். திருக்களார் கிராம சர்வே எண்.185/4 ல் கிராம கணக்கு யார் பெயரில் உள்ளது என்றால் கிராம கணக்கு பதிவேட்டில் கண்ணன் பெயரில் உள்ளது. **(கிராம கணக்கு பதிவேட்டின் அ பதிவேடு நீ.ம.சா.ஆ–1 ஆகவும், அடங்கல் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.2 ஆகவும், சிட்டாவின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.3 ஆகவும், புல வரைபடம் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** கிராம கணக்கில் உள்ள புல வரைபடம் எந்த வித உட்பிரிவும் செய்யவில்லை என்றால் சரிதான். புல வரைபடத்தில் குறுக்கு கோடு இட்டிருந்தால் வீடு இருப்பதை குறிப்பிடுவது என்றால் சரிதான். கிராம புல வரைபடத்தில் ஒரு வீடு இருப்பதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) நீ.ம.சா.ஆ–1 முதல் நீ.ம.சா.ஆ–4 வரையிலான ஆவணங்களில் இந்நாளது வரை எந்தவித திருத்தமும் செய்யவில்லை என்றால் சரிதான். வருவாய் துறையில் நிலை ஆணையின்படி தான் நாங்கள் செயல்படுவோம் என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்பாக பட்டாவில் வாதியின் பெயர் தவறுதலாக சேர்த்தது குறித்து பிரதிவாதியானவர் வருவாய் கோட்டாட்சியரிடம் திருத்த வேண்டி மனு தாக்கல் செய்து அதில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பிரதிவாதிக்க ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த உத்தரவை எதிர்த்து வாதியானவர் மாவட்ட வருவாய்

அலுவலரிடம் மேல்முறையீடு செய்து அதில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளதால் எந்த வித உத்தரவும் பிறப்பிக்காமல் இதுவரை உள்ளது என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ–1 ஆவணமானது மன்னார்குடி கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவிற்கு முன்பு கொடுக்கப்பட்ட சிட்டா என்றால் சரிதான். வருவாய் நிலை ஆணைக்கு எதிராகவும், அரசு கணக்கில் உள்ள ஆவணங்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரிதான். கிராம பதிவேட்டில் தாவா சொத்தில் பிரதிவாதி கண்ணன் தான் உரிமையாளர் என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.21 15:54:48 +0530

District Munsif
Mannargudi.